செ.வெ.எண் :32 நாள்: 07.12.2018

**நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் ரூ.1 கோடியே 43 இலட்சத்து 91 ஆயிரத்து 714 மதிப்பிலான 3898 விலையில்லா மிதிவண்டிகளை மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் வழங்கினார்.**

………………

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம், ஆயக்காரன்புலம் நடேசனார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் புஷ்பவனம், செம்போடை, வேதாரண்யம், ஆயக்காரன்புலம், தகட்டூர், தாணிக்கோட்டகம், பஞ்சநதிக்குளம் கிழக்கு, தேத்தாக்குடி தெற்கு, கத்தரிப்புலம், கரியாப்பட்டினம், சாபோஜிராஜபுரம், கோடியக்கரை, தோப்புத்துறை, கடிநல்வயல் ஆகிய அரசு மேல்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த 3898 மாணவ மாணவியர்களுக்கு ரூ.1 கோடியே 43 இலட்சத்து 91 ஆயிரத்து 714 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தலைமை வகித்தார்.

மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் பேசியதாவது,

“தமிழக மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், அனைவரும் கல்வி கற்றவர்களாக இருந்தால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியத்தைச் சேர்ந்த 17 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் 2017-2018 ஆம் கல்வியாண்டில் 11-ம் வகுப்பு பயின்ற 846 மாணவர்களுக்கு ரூ.36 இலட்சத்து 81 ஆயிரத்து 984 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளும் 1016 மாணவிகளுக்கு ரூ.31 லட்சத்து 85 ஆயிரத்து 190 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கப்படுகின்றன. 2018-19 ஆம் கல்வி ஆண்டில் 11-ம் வகுப்பு பயிலும் 1036 மாணவர்களுக்கு தலா ரூ.3765 வீதம் மொத்தம் ரூ.39 இலட்சத்து 540 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளும், 1000 மாணவிகளுக்கு தலா ரூ.3624 வீதம் மொத்தம் ரூ.36 இலட்சத்து 24 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கப்படுகின்றன. 2017-18 மற்றும் 2018-19 கல்வியாண்டுகளுக்கு சேர்த்து 1882 மாணவர்கள், 2016 மாணவிகள் உட்பட மொத்தம் 3898 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1 கோடியே 43 இலட்சத்து 91 ஆயிரத்து 714 மதிப்பிலான விலையில்லா விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

எனவே மாணவ, மாணவியர்கள் கல்வி கற்பதின் மூலம் உலக அறிவைப் பெறும் வகையில் தமிழ்நாடு அரசு வழங்கும் நல்ல திட்டங்களைப் பயன்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கவேண்டும்.” என்றார்.

விழாவில் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.செ.அமுதா, தேத்தாக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஆர்.கிரிதரன், அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், இருபால் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
நாகப்பட்டினம்.**